சென்னசந்திரம் ஊராட்சி மன்றத்தலைவரின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.ஜெ.ஜெயக்குமார் ரெட்டி,

CHENNASANDIRAM PANCHAYAT
HOSUR UNION KRISHNAGIRI DT

ந.க.எண்: 1/2024/செ.ஊ **நாள்: 01.07.2024**

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம் - கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஊராட்சி ஒன்றியம் - சென்னசந்திரம் ஊராட்சி காளஸ்திபுரம் வருவாய் கிராம புல எண். 62/3B ஆகியவற்றில் 0.91.50 ஹெக்டர் அல்லது 9150 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை

1. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD4(3) துறை நாள்: 04.05.2017.
2. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD4(3) துறை நாள்: 04.06.2004.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:19799/2020/போ./நாள்:24.12.2020.
4. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்: 04.02.2019 மற்றும் 31.01.2020.
5. அரசாணை எண்: 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை (UD4(3) நாள்: 23.09.2020.
6. அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, (UDR(4) நாள்: 09.12.2020.
7. நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:13686/2017/LA-1, நாள்: 08.09.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:12201/2017/சி.பி, நாள்: 22.09.2017.
9. அரசு கடிதம் எண்.19113/நவ4(3), 2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்:30.08.2017.
10. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:13686/2017/LA, நாள்: 08.09.2017.
11. உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஒசூர் அவர்களின் ந.க.எண்: 6XLD4TQG/2024/2024/TCP DATE: 23.04.2024
12. தானப்பத்திர எண்: 6106/2024 சார் பதிவாளர் அலுவலகம், ஒசூர், நாள்: 26.03.2024
13. மனுதாரர் Mr.L.Obula reddy & 2 others என்பவரின் விண்ணப்பம் நாள் : 06.05.2024
14. சென்னசந்திரம் ஊராட்சி மன்ற தீர்மான எண். 09/.19.06.2024

❁ ❁ ❁ ❁

ஆணை:-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஊராட்சி ஒன்றியம் சென்னசந்திரம் ஊராட்சி காளஸ்திபுரம் வருவாய் கிராம புல எண்.62/3B ஆகியவற்றில் 0.91.50 ஹெக்டர் அல்லது 9150 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தில் அமையவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் ம.வ/ஒ.பு.ந..கு S.W.P எண்: (கி.மா) 64/2024 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வரப்பெற்றுள்ளது.

மேலும் நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ./தி.அ/ஒ.பு.ந.கு (கி.மா) S.W.P எண்.33/2024 என எண்ணிட்டு திட்ட அனுமதியும்** பார்வை (11) இல் காணும் உத்திரவு கடிதத்தில் வழங்கி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை-11 இல் காணும் உறுப்பினர் செயலர் (பொ), ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், ஒசூர் அவர்களின் இறுதி ஒப்புதல் ஆணையில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யவேண்டும். மேலும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் ஆணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

விபரம்		பரப்பளவு விடுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	:	9150.00 ஹெக்டேர்(அ) 9150 ச.மீ
கோரிய மனைகள்	:	45 மனைகள்
ஒதுக்கிய மனைகள்	:	45 மனைகள்
மனைப்பிரிவு சாலை பரப்பு	:	3194.16 ச.மீ
மனைப்பிரிவு பரப்பு (சாலை பரப்பு நீங்கலாக)	:	5955.84 ச.மீ
பொது ஒதுக்கீடு :- **உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை**		
மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு	:	3194.16 ச.மீ
உள்ளாட்சிக்கான பொது உபயோகம்	:	37.08 ச.மீ (0.62%)
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான பொது ஒதுக்கீடு	:	45.18 ச.மீ (0.75%)

எனவே ஒசூர் ஊராட்சி ஒன்றியம், சென்னசந்திரம் ஊராட்சி காளஸ்திபுரம் வருவாய் கிராம புல எண்.62/3B ஆகியவற்றில் 0.91.50 ஹெக்டர் அல்லது 9150 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தில் அமையவுள்ள உத்தேச குடியிருப்பில் மனைகள் முறையே 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, ஆக மொத்தம் 45மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை-11 இல் காணும் திட்ட அனுமதியின் இறுதி ஒப்புதல் அடிப்படையிலும், பார்வை-4 மற்றும் 6 இல் தெரிவிக்கப்பட்ட அரசாணைகளின்படி மனைப்பிரிவில் சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி கழிவுநீர் கால்வாய் வசதி ஆகியவை முழுமையாக அரசு விதிமுறைகளுக்குட்பட்டு முழுமையாக செயல்படுத்தவேண்டும். மேலும் அரசுக்கு செலுத்தப்படவேண்டிய தொகைகள் அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளதாலும் பார்வை 14 இன்படி ஊராட்சியில் முறையாக தீர்மான எண்: 09/19.06.2024 படி இயற்றப்பட்டுள்ளதாலும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இம்மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி இதன் வழி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. உறுப்பினர் செயலர் (பொ), ஓசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஓசூர் அவர்களின் பார்வை-11 இன்படி வரப்பெற்ற தொழில்நுட்ப மற்றும் திட்ட அனுமதி ஆணையின்படி வரைபடத்தில் உள்ள மனைகளுக்கு வழங்கிய ஒப்புதலில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனை பத்தி-1A, B இன்படியும் மற்றும் நிபந்தனையின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

2. நகர் ஊரமைப்பு மற்றும் உள்ளாட்சித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு மற்றும் உள்ளாட்சித் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

3. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் தவிர மற்ற மனைகளை வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள அனைத்து இடங்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்படவேண்டும். அந்த இடங்கள் பார்வை-8, 9 இல் தெரிவிக்கப்பட்ட அரசுக் கடிதங்களின்படி பட்டா மாற்றம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

4. விரிவு அபிவிருத்தி திட்டப்பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்படவேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

5. இந்த மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கியதற்கு தணிக்கையில் ஏதேனும் தொகை செலுத்தப்படவேண்டி இருப்பின் அத்தொகையினை ஒரே தவணையில் செலுத்திடவேண்டும்.

6. தங்களால் 26.03.2024 அன்று வழங்கப்பட்டுள்ள உறுதிமொழி பத்திரத்தில் தெரிவித்துள்ளபடி கால அவகாசத்திற்குள் மனைப்பிரிவில் சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, கழிவுநீர் கால்வாய் வசதி போன்ற அனைத்து பணிகளும் முழுமையாக செயல்படுத்திய பின்புதான் மனைகளை கிரய விற்பனை செய்யவேண்டும். தவறும் பட்சத்தில் இந்த அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்ய ஊராட்சி நிர்வாகத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

7. மனைப்பிரிவில் அமையவுள்ள கட்டுமானங்களுக்கு கிராம ஊராட்சியின் மூலம் நீல வரைபட ஒப்புதல் பெறப்பட்டபின் கட்டுமான பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

8. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட ஆவணங்கள் தவறானவை அல்லது போலியானவை என கண்டறியப்பட்டால் மனைக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் தாங்கள் 26.03.2024 அன்று வழங்கிய ரூ.100/- உறுதிமொழி பத்திரத்தின்படி எவ்வித முன் அறிவிப்பு இன்றி ரத்து செய்ய ஊராட்சி மன்றத்தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

9. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக் கொள்ளவேண்டும். மேலும், அதன்மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

10. மனைப்பிரிவு அமைய உள்ள இடத்தில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக பின்னர் தெரியவரின் எவ்வித முன்னறிவிப்புமின்றி அங்கீகாரம் இரத்து செய்யப்படும். மேலும் மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் வழங்கிய சான்றினை ஏற்று நில உரிமை குறித்து பரிசீலக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கரீக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்பட்டுகிறது.

11. மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

12. மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலினை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

13. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6′ X 4′ அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

14. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்ய நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

15. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

16. இம்மனைபிரிவின் நிலங்கள் தொடர்பாக நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் இருப்பது தெரியவரின் இம்மனைப்பிரிவினை முறைப்படுத்திய ஆணை எவ்வித முன் அறிவிப்பு இன்றி இரத்து செய்யப்படும்.

11/7/24


ஊராட்சி மன்றத்தலைவர்
PRESIDENT,
Chennasandiram Panchayat
சென்னசந்திரம் ஊராட்சி
Hosur Union

பெறுதல்:-

Mr.L.Obula reddy & 2 others
Door.No:2/141-1-Uliyalam village,
Bagalur Road. Avalapalli post,
Hosur taluk,Krishnagiri District. 635109

நகல்
1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஒசூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. உறுப்பினர் செயலர் (பொ), ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஒசூர்.
3. வட்டாட்சியர், ஒசூர் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்.
4. சார் பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், ஒசூர் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்.

கொ.ஒ.ம.வ/ஒ.பு.ந.வ.கு.எண்:01/2020
மனைகள்



கொ.ஒ.ம.வ/ஒ.பு.ந.வ.கு.எண்:01/2020
ச.எண்: 62/2B, பூங்கா-2

ROC NO-01/2024-25

APPROVED IN THIS OFFICE
Subject to the Conditions
Mentioned Therein Valued
from 01.07.2024

PRESIDENT
Chennasandiram Panchayat
Hosur Union

உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பொது உபயோகம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பொது உபயோகம்

Signature valid

கிருஷ்ணகிரி மாவட்ட நக
ஓசூர் புதுநகர் வளர்ச்சி

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், சென்னசந்திரம் ஊராட்சி ச.எண் 62/3B-ல் அமையும் கு தொழில் நுட்ப ஒப்புதல் வரை

அளவு 1 அங்குலம் 33 அடி (1:400)

இனையதள விண்ணப்ப எண் 6XLD4TQG /2024

குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்த பரப்பு : 0.91.50 ஹெக்டர்(மு) 9150.00 ச.மீ)

மனைப்பிரிவின் சாலை பரப்பு : 3194.16 ச.மீ

விற்பனைக்குறிய மனைபரப்பு (சாலை பரப்பு நீங்களாக) : 5955.84 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 45

மனைப்பிரிவின் எல்லை :

நிலையிலுள்ள சாலை :

பொது ஒதுக்கீடு :

ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

மனைப்பிரிவின் சாலை பரப்பு : 3194.16 ச.மீ

ஊராட்சிக்கான பொது ஒதுக்கீடு : 37.08 ச.மீ 0.62 %

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டவை : 45.18 ச.மீ 0.75 %

தேவையான பூங்கா பரப்பு 10.0 %=பொது ஒதுக்கீடு 595.58 ச.மீ

பொது ஒதுக்கீடு 10% 595.58 ச.மீ பரப்பிற்குரிய தொகை ரூ 97675/- அரசு நில வழிகாட்டி மதிப்பீட்டின்படி மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மூலை முடக்கு:

12.0மீ வரை சாலைகளுக்கு 1.50x1.50மீ விடப்பட வேண்டும்

நிபந்தனைகள்:

1 அரசாணை எண் 181 வீட்டு வசதி மற்றும் நகர்புறவளர்ச்சி துறை நாள் 09.12.2020 ன படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்

2.இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இணைப்புகள் அளிக்கும்முன் இடத்தினை ஒருங்குறைவாகும் நிலவரித் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்னும்தற துறைகளுக்கும் நில ஆர்ஜித படுவல் மாவட்ட வருவாய் அலுவலரும் அனுப்பப்பட வில்லை என்றும், ஊராட்சி மன்ற தலைவர் சென்னசந்திரம் ஊராட்சி அவர்களால் உறுதியெழுது கொள்ளப்பட வேண்டும்.

3 நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் சிரிவினைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படுகையல் ஏற்படும் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் வலித் முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்துசெய்யப்படும்.

4.விற்பனைக்குறிய மனைகளை விற்பனை செய்யும் போது இலவசமாக நகர்களுக்கு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தில் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் விற்பனையாளர் மனைப்பிரிவு தலையில் 6'x4' அளவிலான நிரந்தர நகல் பலகை முலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகசிக்கப்பட வேண்டும்

6.நகர் ஊரமைப்புத்துறை ஈட்டுப்பாடாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதின் முலம் விண்ணப்பதாரரின் மேலும் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தில் சமர்ப்பித்த ஆவணங்களில் விண்ணப்பத்தில் குத்தகை பத்திரம் பட்டா நகலைத்தில் பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதார் வரைச் செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது அதன் முலம் முற்றுகட்டமாக விண்ணப்பதாருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளது என்று பார்க்கப்படுகிறது

7.The TamilNadu Government in G.O.No.112, Housing And Urban Development Department Dated 22-06-2017 have Approved The Tamil Nadu Real Estate [Regulation & Act 2016, The Promotor Has to Advertise, Market, Book Sell [or] offer For Sale [or] Invite persons to purchase in any manner Any Plot, Apartment [or] Building as The case may be, In any Real Estate Project [or] Part of it, Only After Registering The Real Estate Project with the Real Estate Regulatory Authority

ம.வ/ஒ.பு.ந.கு (கி.மா) SWP எண்: 64/2024

ம.வ/தி.அ/ஒ.பு.ந.கு (கி.மா) SWP எண்: 33/2024

துணை இயக்குநர்
ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர்